

# 5 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை

***மத்தியகால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்வுகளின் கீழ் இலங்கையின் அரசியல் நிலை, இராசதானிகள் இடம் பெயர்ந்த முறை, மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பொருளாதாரம், சமயம், கலை, இலக்கியம், கட்டடக்கலை பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இவ்வலகினைக் கற்போம்***

## அரசியல் வரலாறு

**பொலன்னறுவை ஆட்சியின் வீழ்ச்சிக்கு வழிகோலிய காரணிகள்**

★ வலிமையற்ற அரசர்கள் ஆட்சிக்கு வந்தமை
★ மகாபராக்கிரமபாகுவின் வெளிநாட்டுக் கொள்கை
★ கொள்ளை நோய் பரவியமை
★ கலிங்க - பாண்டிய வம்சத்திற்கிடையிலான பிரச்சினை
★ பொருளாதார வீழ்ச்சி

இக்காரணிகளுள் பொலன்னறுவையின் வீழ்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடைய காரணியாக அமைவது மாகனுடைய ஆக்கிரமிப்பும் அவனுடைய கொடூரமான நடவடிக்கைகளும் ஆகும். மாகனுடைய ஆக்கிரமிப்பால் துன்பத்திற்குள்ளான பொதுமக்களும் பிக்குகளும் பாதுகாப்புத் தேடி உருகுணை பிரதேசத்திற்கும் மலையரட்டைக்கும் குடிபெயர்ந்தனர். இவர்களுள் சிலர் தென்மேற்கு நோக்கி குடிபெயர்ந்து காடுகள், மலைகள் என்பவற்றால் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைத் தலைநகரங்களாகத் தெரிவு செய்து அதனைச் சூழவுள்ள பிரதேசங்களை ஆட்சி செய்தனர். அவ்வாறு நிர்வாக மையங்களாகத் (தலைநகர்) தெரிவு செய்த சில இடங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

★ யாப்பகூவ - சுப தளபதி
★ கோவிந்தமலை - புவனேகபாகு
★ மினிப்பே - சங்க தளபதி
★ தம்பதெனிய - 3 ஆம் விஜயபாகு

மாகனிடம் காணப்பட்ட விசேட படையணிகள் காரணமாக இத்தலைவர்களுக்கு இராசரட்டையைக் கைப்பற்றுவது கடினமான செயலாகக் காணப்பட்டாலும் அதற்காக கடும் முயற்சி மேற்கொண்டமையையும் அறிய முடிகிறது. இருப்பினும் பிரதேசத் தலைவர்கள் என்ற விதத்தில் மக்களையும் பௌத்த சமயத்தையும் பாதுகாப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டத்தக்கன.

## தம்பதெனிய இராசதானிக் காலம் (கி.பி 1232 - 1270 வரை)

பிரதேசத் தலைவனாக உருவாகிய 3ஆம் விஜயபாகு கி.பி 1232 ஆம் ஆண்டில் தம்பதெனியவை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். மாயரட்டையை ஐக்கியப்படுத்தி அங்கு அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு 3ஆம் விஜயபாகு மன்னனால் முடிந்தது. மாகனுடைய ஆக்கிரமிப்பால் கொத்மலைக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாக நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த புத்த பெருமானுடைய தந்ததாது, பாத்திரதாது என்பனவற்றை எடுத்து வந்து கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல மலையில் தலதா மாளிகை ஒன்றை அமைத்து அங்கு பிரதிஷ்டை செய்ததாக பூஜாவலிய என்ற நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புனித தந்ததாதுவைப் பெற்றுக் கொண்டதன் மூலம் தனது ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டான்.




*தேசப்படம் **5.1** - இராசதானி தென்மேற்கு நோக்கிப் பரவியமை*

### 3ஆம் விஜயபாகு மன்னனின் பணிகள்

- ★ பெலிகலையில் தலதா மாளிகையை அமைத்தமை
- ★ பாதுகாப்புத் தேடி வெளியூர்களுக்குச் சென்ற பிக்குகளை மீள அழைத்துக் கொண்டமை
- ★ தம்பதெனியாவில் விஜய சுந்தர ராமய என்ற பெயரில் விகாரை ஒன்றை அமைத்தமை
- ★ உபசம்பதா சடங்குகளை மீண்டும் நடத்தி பௌத்த பிக்குகள் சங்கத்தில் சீர்திருத்தத்தை மேற்கொண்டமை
- ★ களனி விகாரையை மறுசீரமைத்தமை
- ★ பண்டைய பௌத்த நூல்களை மீண்டும் எழுதுவித்தமை
- ★ வத்தளையில் விஜயபாகு விகாரையை அமைத்தமை
- ★ 3ஆம் விஜயபாகுவின் 4 வருடகால ஆட்சியின் பின்னர் 2ஆம் பராக்கிரமாகு தம்பதெனியா இராச்சியத்தின் அரசனானான்.


## 2 ஆம் பராக்கிரமபாகு (கி.பி 1236 - 1270) வரை

இவன் பெலிகலையில் இருந்த தந்ததாதுவை தம்பதெனியாவில் பிரதிஷ்டை செய்து உன்னதமான தலதா வழிபாட்டை மேற்கொண்டு மாகனிடம் இருந்து நாட்டை மீட்பதாக மக்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தான். மொழி, சமயம் தொடர்பாகப் பாண்டித்தியம் பெற்றுக் காணப்பட்டதனால் இரண்டாம் பராக்கிரமபாகு அரசன் "கலிகால சாகித்திய சர்வக்ஞ (சகலகலா) பண்டித" என்ற பட்டப் பெயரையும் பெற்றான். இரண்டாம் பராக்கிரமபாகு மூன்று ஆக்கிரமிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

1. மாகனுடன் நடந்த யுத்தம்:
2. சந்திபானுவின் முதலாவது படையெடுப்பு
3. சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பு

சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு, இரண்டாவது பராக்கிரமபாகுவின் 11ஆம் வருட ஆட்சிக் காலத்தில் இடம் பெற்றது(கி.பி 1247). சந்திரபானு மலாயாவில் இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. பராக்கிரமபாகுவின் மருமகனான வீரபாகு இளவரசன் இப்போரிற்குத் தலைமை தாங்கினான். போரில் தோல்வியைத் தழுவிய சந்திரபானு தப்பியோடினான்.

மாகனுடைய ஆட்சியில் இருந்த இராசரட்டையை மீட்டெடுத்தல், மன்னன் பராக்கிரமபாகுவின் அடுத்த முயற்சியாகக் காணப்பட்டது. இதற்காகத் தென்னிந்தியாவில் இருந்து பாண்டிய மன்னனுடைய உதவியைப்பெற்றுக் கொண்டான். பாண்டியப் படையும் இரண்டாம் பராக்கிரமபாகுவின் படையும் இணைந்து கிழக்கிலும் மேற்கிலும் பொலன்னறுவையைச் சுற்றிவளைத்து கி.பி. 1255 இல் மாகனைத் தோற்கடித்தன. முதலாம் படையெடுப்பில் தோல்வியடைந்த சந்திரபானு மீண்டும் இலங்கை மீது படையெடுத்தான் இந்த ஆக்கிரமிப்பை பாண்டிய மன்னனின் உதவியைப்பெற்று இரண்டாம் பராக்கிரமபாகு கி.பி. 1261 இல் சந்திரபானுவைக் கொன்றான். இதற்குக் கைமாறாக பாண்டிய அரசன் ஜாவகனின் மகனை வட இலங்கையின் பிரதிநிதியாக நியமித்ததாகக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.



*உரு 5.1 தம்பதெனிய இராசதானி*

## இரண்டாம் பராக்கிரமபாகுவின் பணிகள்

- ★ பிக்குகளின் ஒழுக்க நெறிக்கோவையை (தம்பதெனிய கதிகாவத்தையை) எழுதுவித்தமை.
- ★ உபசம்பதா சடங்கினை நடாத்தியமை
- ★ வெளிநாடுகளில் இருந்து ஒழுக்க தர்மமுடைய பிக்குகளை அழைப்பித்தமை
- ★ கவ்சிலு மின, விசுத்தி மார்க்க சன்னய ஆகிய நூல்களை எழுதியமை.


இரண்டாம் பராக்கிரமபாகு அரசனின் பின் போசத்விஜயபாகு, 4ஆம் விஜயபாகு என்ற பெயரில் கி.பி 1271 இல் அரசனானான். அரண்மனையில் நிகழ்ந்த சதித் திட்டத்தினால் அவன் கொல்லப்பட்டான். அதன்பின் 1ஆம் புவனேகபாகு அரசனானான். அவன் சிறிது காலத்தில் யாப்பகூவ கோட்டைக்குச் சென்று அங்கிருந்து ஆட்சி செய்தான்.


இலவச விநியோகத்திற்காக

**செயற்பாடு :**

★ வெளிநாட்டு ஆதிக்கத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு தம்பதெனிய அரசர்கள் மேற்கொண்ட கடும் முயற்சிகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து சொற்பொழிவொன்றை நிகழ்த்துக.

## யாப்பகூவ இராசதானி


*உரு 5.2 யாப்பகூவ இராசதானி*

1 ஆம் புவனேகபாகு கி.பி 1272 இல் யாப்பகூவ இராசதானியின் அரசனானான். போசத் விஜயபாகுவிற்குப் பக்க பலமாக இருந்த வன்னிய தலைவனிடம் இருந்தும் வடக்கின் ஆட்சியாளனிடம் இருந்தும் இவ்விராச்சியத்திற்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. இந்த அச்சுறுத்தல்களை இவன் இலகுவாக முறியடித்தான். வருடாந்த உபசம்பதா சடங்கை நடாத்திய இம்மன்னன் கி.பி.1284 இல் இறந்தான். இதற்கிடையில் குலசேகரம் என்ற பாண்டிய அரசனுடைய பிரதிநிதியான ஆரியச் சக்கரவர்த்தி பெரிய படைகளுடன் வந்து யாப்பகூவவைக் கைப்பற்றி தந்ததாதுவையும் எடுத்துச் சென்றதாக மகாவம்சத்தின் 2ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி.1284 இல் 1ஆம் புவனேகபாகு அரசனின் இறப்புடன் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. 3ஆம் பராக்கிரமபாகு பாண்டிய நாட்டிற்குச்சென்று தந்த தாதுவையும் பாத்திர தாதுவையும் பெற்று. கி.பி. 1287இல் பொலன்னறுவையின் அரசனானான். 3ஆம் பராக்கிரமபாகுவைத் தோற்கடித்த 2ஆம் புவனேகபாகு இளவரசன் கி.பி.1292 இல் யாப்பகூவவின் அரசனானான். 7 வருடம் ஆட்சி செய்த பின்னர் இவன் குருணாகலையைத் தனது இராசதானியாகத் தெரிவு செய்தான்.

## குருணாகல் இராசதானி (கி.பி 1300 -1341)

கி.பி 1300 இல் இரண்டாம் புவனேகபாகு அரசன் தனது ஆட்சிக்காலத்தில் இராசதானியை குருணாகலைக்கு மாற்றினான். அவனுடைய இறப்பிற்குப் பின் அவனுடைய மகன் 4ஆம் பராக்கிரமபாகு கி.பி 1302 இல் அரசனானான். குருணாகல் காலத்தை பிரகாசிக்கச் செய்த சிறந்த அரசனாக இவன் முக்கியத்துவம் பெறுகிறான். பௌத்த சமயத்திற்கும் இலக்கியத்திற்கும் இவ்வரசன் செய்த சேவை அளப்பரியதாகும்.

### 4ஆம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகள்

- ★ குருணாகலில் தலதாமாளிகையை அமைத்தமை
- ★ தந்ததாதுவை பாதுகாப்பதற்கும் அதனைப் பராமரிப்பதற்கும் கிராமங்களைத் தானம் செய்தமை.
- ★ 'தலதா சிரித்த' என்ற நூலை எழுதியமை
- ★ ஜாதகக் கதை நூலை சிங்களத்தில் மொழிபெயர்க்க ஆதரவு வழங்கியமை
- ★ வீதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா, தொட்டகமுவ விஜயபா பிரிவெனா என்பவற்றுக்கு ஆதரவு வழங்குதல்.
- ★ கண்டி அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தமை
- ★ சிங்கள போதிவங்ச அநாகத்த வங்ச ஆகிய நூல்களை எழுதியமை 4 ஆம் பராக்கிரமபாகுவின் இறுதி அரசாட்சிக் காலம் கி.பி 1326 என கருதப்படுகின்ற பொழுதிலும் இது தொடர்பாக சரியான தகவல் கிடைக்கபெறவில்லை. அதன் பின்னர் 3ஆம் புவனேகபாகு, சவுலு விஜயபாகு ஆகிய அரசர்கள் இருவர் ஆண்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

**செயற்பாடு :**

★ *குருணாகல் இராச்சியத்தின் மிகச் சிறந்த ஆட்சியாளன் 4ஆம் பராக்கிரமபாகு ஆவான். இவனுடைய செயற்கரிய செயல் தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தேடித் தொகுக்க.*

## யாழ்ப்பாண இராச்சியம்.

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தகவல்களைப் பெறும் மூலங்களாக யாழ்ப்பாண வைபவமாலை, செகராஜசேகரமாலை என்னும் நூல்கள் காணப்படுகின்றன.



*உரு 5.3 நல்லூர் கோவில்*

தம்பதெனிய இராசதானியை 2 ஆம் பராக்கிரமபாகு ஆட்சி செய்யும்போது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பிற்குப் பின் சந்திரபானு என்னும் ஒருவன் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆட்சியாளனாக நியமிக்கப்பட்டதாக வரலாற்று மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன.

யாழ்ப்பாணத்தில் விஜயகூழங்கை என்ற ஆட்சியாளரைப் பற்றியும் வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லா அரசர்களும் 'சிங்கை ஆரியன்' என்ற பெயரைத் தமது பெயருடன் இணைத்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் 12 பேர் ஆட்சி செய்ததாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலில்



இலவச விநியோகத்திற்காக

குறிப்பிடப்பட்டுள்ளது. விஜய கூழங்கை, குலசேகர ஆரியன், விக்கிரமசிங்க ஆரியன், வரோதயன், மார்த்தாண்டன், குணபூசணன், விரோதயன், ஜயவீரன், குணவீரன், கனகசூரியன், பரராஜசேகரன், சங்கிலி என்போரே அப்பன்னிரு ஆட்சியாளர்களுமாவார்.

இவர்களுள் வரோதய மன்னன் தமிழர்கள், சிங்களவர்கள் இடையே நல்லுறவுடன் செயற்பட்டமையால் மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றிருந்தான். கி.பி 1347 இல் கம்பளை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் இரண்டு சந்தரப்பங்களில் படையெடுத்ததாக ''நிகாய சங்கிரஹய, ராஜாவலிய'' என்னும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி 1360 களில் புத்தளத்தில் இருந்து பாணந்துறை வரையான கடற்கரையோரத் துறைமுகங்களை ஆரியச்சக்கர்வரத்திகள் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். இச்சந்தர்ப்பத்தில் நிஸங்க அழகக்கோனார் என்ற படைத் தளபதி ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டையில் அமைந்துள்ள காவல் அரணைப் பலப்படுத்திக் கொண்டு பாணந்துறை தொடக்கம் வடக்கு வரையான துறைமுகங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டான்.

கி.பி 1390 இல் ஆரியச் சக்கரவர்த்தி வடக்கின் தரைப்பகுதியினூடாக ஒரு படையையும், மேற்கின் வத்தளை கொழும்பு வரையான கடல் வழியாக இன்னொரு படையையும், அனுப்பி வைத்தான். கம்பளை அரசனின் படை தரைவழியாக வந்த படையையும் அழகக்கோனாரின் படை கடல்வழியாக வந்த படையினரையும் தோற்கடித்தன.

15 ஆம் நூற்றாண்டு ஆரம்பமாகும்போது தென்னிந்தியாவின் விஜயநகர பேரரசின் கீழ் யாழ்ப்பாண இராச்சியம் இருந்ததாக வரலாற்று மூலாதாரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. விஜயநகரப் பேரரசின் 2ஆம் ஹரிஹர அரசனுடைய காலத்தில் இலங்கை உட்பட பல இராச்சியங்களை அவன் கைப்பற்றியதாக ஆலம்புரி சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் வடபிரதேசம் இவனின் படையெடுப்பிற்குப்பின் விஜய நகரப் பேரரசுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டது.

விஜய நகரப் படை வீரர்களின் உதவியுடன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திக்கு எதிராக கோட்டை அரசனானான். 6ஆம் பராக்கிரமபாகு சப்புமல் குமார என்பவனை அனுப்பி ஆக்கிரமிப்புச் செய்தான். கி.பி 1449 இல் இடம் பெற்ற இப்படையெடுப்பின்போது கனகசூரிய சிங்கன் என்ற ஆரியச் சக்கரவர்த்தி தென்னிந்தியாவிற்குத் தப்பியோடினான். அத்துடன் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் வடபகுதி கோட்டை இராச்சியத்திற்கு உரித்தாகியது. இதன் பின்னர் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல் குமாரன் நியமிக்கப்பட்டான். தென்னிந்தியாவிற்குத் தப்பியோடிய கனக சூரியன் மீண்டும் ஒரு சேனையுடன் வந்து யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டதாக யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூ லில் குறிப்பிடப்பட்டுள்ளது. கனகசூரியனுக்குப் பின் பரராஜசேகரமும் அதன் பின் சங்கிலியும் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தனர். கி.பி 1621 இல் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர் வசமாகியது.

## கம்பளை இராசதானி (கி.பி1341 - 1415)

கம்பளையை இராசதானியாகத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள்.

- ★ தலைநகராகுவதற்கு முன்பு, உபநகரமாக விளங்கியமை.
- ★ பல மலைகளால் சூழப்பட்ட சமவெளிப்பிரதேசத்தில் அமைந்திருந்தமை.
- ★ சிவனொளி பாத மலைக்குச் செல்லும் சந்தியில் அமைந்திருந்தமை.
- ★ மகாவலி கங்கைக் கரையில் அமைந்திருந்தமை.

கி.பி 1341இல் 4ஆம் புவனேகபாகு அரசன் கம்பளையை தலைநகரமாக்கி ஆட்சிக்கு வந்தான். அக்காலத்தில் அவரது சகோதரரான 5 ஆம் பராக்கிரமபாகு கேகாலை மாவட்டத்தில் டெடிகமையில் இருந்து ஆட்சி நடத்தினார். இக்காலத்தில் பிரபுக்கள் பரம்பரையைச் சேர்ந்த அழகேஸ்வரன் என்ற பெயருடையவர் களுத்துறை மாவட்டத்திலுள்ள ரைகமவில் பலமுடையவராகக் காணப்பட்டார். கம்பளை அரச குடும்பத்துடன் தொடர்புடைய இன்னொரு பிரபுக்கள் குடும்பம் சேனாலங்காதிகார செனவிரத் எனக் குறிப்பிடலாம்.

கம்பளையின் ஒவ்வொரு அரசனும் அரசபதவிக்கு நியமனம் பெறும் முன்பு 'யுவராஜா' என்ற பதவியை வகித்தனர். 4ஆம் புவனேகபாகு அரசனுக்கு சேனாலங்காதிகார செனவிரத் என்ற பெயரில் பிரபலமான அமைச்சர் ஒருவன் இருந்தான்.

4ஆம் புவனேகபாகுவின் பின் 5 ஆம் பராக்கிரமபாகு கம்பளையின் அரசனானான். அவருடைய பிரதம அமைச்சராக சேனாலங்காதிகார செனவிரத் நியமிக்கப்பட்டதுடன் அவன் தெற்கில் சமய நிகழ்வுகளை நடத்தி பராக்கிரமபாகு மன்னனுக்கும் உதவியாக இருந்தான்.

கி.பி 1358 இல் விக்கிரமபாகு எனும் இளவரசன் நிஸங்க அழகக்கோனாரின் உதவியுடன் கிளர்ச்சியை ஏற்படுத்தி கம்பளை சிம்மாசனத்தைக் கைப்பற்றி 3ஆம் விக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான்.

இக்கிளர்ச்சிக்கு வடக்கின் ஆரியச்சக்கரவர்த்தியும் உதவியதாகக் கூறப்படுகிறது. 3ஆம் விக்கிரமபாகு அரசனுடைய பிரதம அமைச்சராக விளங்கிய சேனாலங்காதிகாரவை அகற்றிவிட்டு நிஸங்க அழகக்கோனாரை அப்பதவிக்கு நியமித்துக் கொண்டான். பிரதம அமைச்சராகி, குறுகிய காலத்துக்குள்ளேயே நாட்டின் அரசியலைக் கொண்டு நடத்தும் ஒருவராக நிசங்க அழகக்கோனார் காணப்பட்டார். யாழ்ப்பாண ஆட்சியாளரான ஆரியச்சக்கரவர்த்தி மன்னார் தொடக்கம் பாணந்துறை வரையான துறைமுகங்களில் வரிஅறவிடும் உரிமையைத் தனதாக்கிக் கொண்டான். இதனால் ஸ்ரீ ஜயவர்தனபுரவில் கோட்டையை அமைத்த அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியைத் தோற்கடித்து மேற்கின் துறைமுகங்களைத் தனதாக்கிக் கொண்டான்.


இலவச விநியோகத்திற்காக

தப்பியோடிய ஆரியச் சக்கரவர்த்தி மீண்டும் கம்பளையைத் தாக்கினார். வெற்றிரகமாக இவற்றுக்கு முகம்கொடுத்த அழகக்கோனார் ஆரியச் சக்கரவர்த்தியை மீண்டும் தோற்கடித்தான்.

5ஆம் புவனேகபாகுவின் பின் கி.பி 1391 இல் வீரபாகு கம்பளையின் அரசனானான். அத்துடன் வீரஅழகேஸ்வர என்பவன் ரைகமவின் அரசனானான். வீரபாகு வீர அழகேஸ்வரனை தமக்குக் கீழ் கொண்டு வருவதற்காக முயற்சித்தபோது அழகேஸ்வரன் தோல்வியடைந்து இந்தியாவிற்குத் தப்பியோடினான். அதன் பின்னர் மீண்டும் இந்தியாவின் உதவியுடன் வீரபாகுவைத் தோற்கடித்து ரைகமவின் அரசனானான். இருப்பினும் வீரஅழகேஸ்வரனின் ஆட்சியை ஏற்றுக்கொள்வதற்கு கம்பளை சேனாலங்காதிகார தளபதி உட்படப் பலர் விரும்பாமையினால் சேனாலங்காதீரவின் பேரனாகிய பராக்கிரம ஏப்பாவை கம்பளை அரசனாக்கியதாக அஸ்கிரிய ஓலைச்சுவடியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.


அக்காலத்தில் சீனாவின் யுங்லோ பேரரசனின் செங்கோ என்ற தளபதியின் கீழ் பாரிய கடற்படை இந்து சமுத்திரப்பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டதுடன் கி.பி 1405 இல் அவன் இலங்கைக்கும் வருகை தந்தான். வீரஅழகேஸ்வரன் அவனுக்கு உரிய மரியாதை வழங்காமையால் அவன் திரும்பிச் சென்று கி.பி 1411 இல் மீண்டும் இலங்கைக்கு வந்தான். இச்சந்தர்ப்பத்தில் செங்கோ வீர அழகேஸ்வரனைத் தோற்கடித்து அவனைச் சிறைப்பிடித்து கைதியாகச் சீனாவுக்குக் கொண்டு சென்றதாகக் கூறப்படுகிறது. சீனப் பேரரசன் தனது பிரதிநிதியாக பாராக்கிரம ஏப்பாவை நியமித்தான்.

**செயற்பாடு :**

★ *கம்பளை இராசதானியின் அரசியல் வரலாற்றில் இடம் பெற்ற பிரதான நிகழ்வுகளை ஒழுங்கு முறையாகத் தொகுக்குக.*

## கோட்டை இராச்சியம் கி.பி 1415 - 1521

கோட்டை நகரின் வரைபடத்தைத் தயாரித்தவர் நிஸங்க அழகக்கோனாராவார். கோட்டை இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளனாக 6ஆம் பராக்கிரமபாகு விளங்குகின்றான். கி.பி 1415 தொடக்கம் 1467 வரை 53 வருடங்கள் ஆட்சி செய்த 6ஆம் பராக்கிரமபாகு முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்தி ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இறுதி மன்னனாவான்.




*தேசப்படம் 5.2 கோட்டை இராச்சியம்.*

**6 ஆம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகள்.**

★ யாழ்ப்பாண இராச்சியம், வன்னிப் பிரதேசம் என்பவற்றை இணைத்துக் கொண்டமை.
★ மலையரட்டையில் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்கியமை.
★ வன்னிப் பிரதேசம் சுயமாக எழுந்து நிற்பதற்கு உதவிய தலைவர்களை அடக்கியமை
★ யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளனாக சப்புமல்குமாரனை நியமித்தமை.
★ விஜயநகரப் பேரரசின் துறைமுகம் ஒன்றை ஆக்கிரமித்தமை.
★ கி.பி 1462 மலைநாட்டில் ஜோதிய இளவரசன் ஏற்படுத்திய கிளர்ச்சியை அடக்குவதற்கு அம்புலுகல இளவரசனை அனுப்பியமை.
★ வியாபாரக் கொடுக்கல் வாங்கலை அடிப்படையாகக் கொண்டு தென்னிந்தியாவின் அதி-வீரராமபட்டினத்தை ஆக்கிரமித்தமை.

கி.பி. 1467 இல் 6ஆம் பராக்கிரமபாகு மன்னன் இறந்தபின் அவனுடைய மகளின் மகனாகிய ஜயபாகு இளவரசன் கோட்டையின் அரசனானான். தனக்கு அரசாட்சி கிடைக்காமையால் கோபமடைந்த யாழ்ப்பாண ஆட்சியாளனான சப்புமல் குமாரன் கோட்டைக்கு வந்து ஜயபாகுவைக் கொன்றுவிட்டு கி.பி. 1469 இல் 6ஆம் புவனேகபாகு என்ற பெயருடன் அரசனானான்.

6 ஆம் புவனேகபாகு அரசனுடைய ஆட்சிக்கு எதிராக பஸ்துன் கோரளையில் கெக்குலத்தோல ஸ்ரீவர்த்தன பதிராஜ இளவரசனும் கேரகம பிக்கு போன்ற மக்கள் தலைவர்களும் கிளர்ச்சி செய்தனர். இது சிறு சிங்கள புரட்சி ''சிங்கள சங்கய'' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. 6 ஆம் புவனேகபாகு இப்புரட்சியை அடக்கி கிளர்ச்சியாளர்களை சிறையிலடைத்தான்.

6ஆம் புவனோகபாகுவின் பின் அவனது மகன் 7ஆம் பராக்கிரமபாகு அரசனானான். இதனால் ஆத்திரமடைந்த அம்புலுகல இளவரசன் கோட்டைக்கு வந்து 7ஆம் பராக்கிரமபாகுவைக் கொன்றுவிட்டு 8ஆம் வீரபராக்கிரமபாகு என்ற பெயரில் கி.பி. 1490 இல் கோட்டையின் அரசனானான்.

**செயற்பாடு :**

★ *"கோட்டை இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளன் 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்". இது தொடர்பாக உமது கருத்தைத் தருக.*

## பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்.

இராசரட்டை பிரதேசத்தில் வசித்த மக்கள் இராசதானிகள் இடம் மாறியதுடன் வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்தனர். இதனால் புதிய புவியியல் சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. குன்றுப் பிரதேசங்களைத் தமது இராசதானியாகத் தெரிவு செய்து கொண்டமையால் பெரிய குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் என்பவற்றை அமைப்பதற்கு முயற்சி செய்யவில்லை. இதனால் விவசாய நடவடிக்கைகளுக்காக மழையை நம்பி இருக்க வேண்டி ஏற்பட்டது. பிரதான பயிர்ச்செய்கை நெற்பயிராகும். நீர் பற்றாக்குறையான பிரதேசத்தில் சேனைப் பயிர்ச்செய்கையும் சற்றுஉயரமான பிரதேசத்தில் தெங்கு, பலா, பாக்கு, வெற்றிலை, மிளகு ஆகிய பயிர்களும் பயிரிடப்பட்டன.

ஈரவலயத்தின் கரையோரத்தில் தெங்குச்செய்கை பரம்பிக் காணப்பட்டது. உதாரணமாக களுத்துறை பெந்தோட்டை, தொட்டகமுவ, மொரட்டுவை, களனி, கேரலை ஆகிய பிரதேசங்களில் தென்னை பயிரிடப்பட்டது. இதனால் தேங்காய் எண்ணெய் பாவனை பிரபல்யம் அடைந்தது.

ஈரவலயத்தில் கறுவா வர்த்தகப் பயிர்செய்கையாகப் பிரசித்தி பெற்றது. பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் போன்ற பயிர்கள் ஈரவலயத்தின் மேலதிக ஏற்றுமதிப் பயிர்களாகக் காணப்பட்டன. யானை, யானைத்தந்தம், முத்து, இரத்தினக்கற்கள் என்பன இந்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய பொருட்களாகும்.படிப்படியாக நீர்வள நாகரிகத்தில் காணப்பட்ட விவசாயப்பொருளாதாரம் வர்த்தகப் பொருளாதாரமாக மாற்றம் பெறுவதைக் காணக்கூடியதாயிருந்தது. இந்தியா, அராபியா சீனா பாரசீகம், எகிப்து ஆகிய நாடுகள் வர்த்தகத்தில் தொடர்பு கொண்ட நாடுகளாகும்.

வெளிநாட்டு வியாபாரம் அரசனின் ஏகபோக உரித்தாக இருந்தது. சீனாவில் இருந்து இலங்கைக்கு பீங்கான் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக டெடிகம பிரசேத்தில் பெறப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. இந்தியாவிலிருந்து காசி சால்வையும் இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய கடைவீதிகள் இருந்ததாக குருணாகலின் ‘விபரம்’ என்ற ஓலைச்சுவடியில் குறிப்பிடப்படுகின்றது. தம்பதெனிய காலத்தில் நாணயங்கள் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. உள்நாட்டு வியாபாரத்துடன் தொடர்புடைய வீதித் தொகுதிகளும் இருந்ததாக அறிய முடிகிறது.

## மக்கள் வாழ்க்கையின் தனித்துவமான பண்புகள்

- ★ தொழில் அடிப்படையிலான சாதி முறைகள் காணப்பட்டன.
- ★ திருமணச் சடங்குகளும் மரணச்சடங்குகளும் சாதிமுறையின் அடிப்படையில் இடம் பெற்றன.
- ★ சமூகத்தில் தந்தை பிரதான இடத்தைப் பெற்றார்.

★ ஒவ்வொருவரினதும் சமூக நிலைக்கு ஏற்ப வீட்டின் அளவு தீர்மானிக்கப்பட்டது
★ சமயம், கல்வி ஆகிய நடவடிக்கைகளில் பெண்களும் ஈடுபட்டனர். உதாரணம் உலகுடையதேவி, பத்மாவதி தேவி.
★ மக்கள் பல்வேறு கிராமிய விளையாட்டுக்களிலும் வினோத விளையாட்டுக்களிலும் ஈடுபட்டனர். பந்தாட்டம், ஊஞ்சல் போன்றன இவற்றுள் சிலவாகும்.
★ பல்வேறு சமய விழாக்கள், பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. வெசாக், பொசன், எசல என்பன இவற்றுள் சிலவாகும்.
★ பாரம்பரிய பழக்கவழக்கங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. உ-ம் : பெயர் சூட்டும் வைபவம், சோறூட்டுதல், திருமணம், மரணம் என்பன நிகழும் சந்தர்ப்பங்கள்.

## சமயம், இலக்கியம், கலைகள்

கலிங்க மாகனுடைய படையெடுப்பினால் இராசரட்டையில் இருந்த பிக்குமார் உருகுணு, மாயாரட்டை ஆகிய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர் தம்பதெனியா காலத்தில் 3ஆம் விஜயபாகு அரசன், தம்பதெனியா விஜய சுந்தரராமய பெலிகல்லை தலதா மாளிகை என்பவற்றை அமைத்ததுடன் களனி விகாரையை புனருத்தாரணம் செய்தான். பாதுகாப்புக் கருதி வெளிநாடுகளுக்குச் சென்ற பிக்குகளை அழைத்து பிக்குகளுக்கான ஒழுக்கநெறிக்கோவைகளை ஒழுங்கு செய்தான்.


*உரு 5.4 லங்காதிலக விகாரை*

விசுத்தி மார்க்க சன்னய, கவ்சிலுமின, சத்தர் மரத்னாவலிய, ஹேசஜ்ஜ மஞ்ஜுசாவ சமந்தக்கூட வர்ணணை ஆகிய நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. புகழ் பெற்ற இலக்கியவாதியான இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன். கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டிதன்' என்ற பட்டப்பெயரைப் பெற்றது இதற்குச் சிறந்த உதாரணமாகும். கம்பளை கால இலக்கிய எழுச்சியினால் தூது (சந்தேச) இலக்கியங்கள் ஆரம்பமாகின. மயூர சந்தேசய, திசர சந்தேசய எலு அத்தனகலு, வங்சய சத்தர்மாலங்காரய, நிக்காய சங்கிரகய ஆகிய நூல்கள் கம்பளைக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களாகும்.


*உரு 5.5 யாப்பஹூவ புத்தர்சிலை*

கோட்டைக்காலத்தில் தொட்டகமுவ ஸ்ரீ ராகுல தேரர், விதாகம மைத்திரி தேரர் கேரகல வனரத்தின தேரர் 6 ஆம் பராக்கிரமபாகு அரசன். நன்னருத் துணைவர் போன்ற கல்வியலாளர்கள் உருவாகினர். பரவி சந்தேசய ஹிராசந்தேசய செலலிஹினி சந்தேசய, ஹன்ச சந்தேசய குத்தில காவிய, காவிய சேகர, புதுகுண அலங்கார, லோவெட சங்கராவ, பெரகும்பா சிரித்த என்பன கோட்டைக் காலத்தில் எழுதப்பட்ட பிரதான நூல்களாகும். கோட்டை யுகத்தில் இலக்கியத்தின் பல்வகைத் தன்மையை

அவதானிக்க முடியும். தூதுகாவியம், பக்தி இலக்கியம் போர் இலக்கியம், புகழ்பாடும் இலக்கியம் ஆலோசனை நூல்கள், அகராதி நூல்கள் ஆகியதுறைகளில் நூல்கள் எழுந்தன. எனவே கோட்டைக்காலம் இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. 6ஆம் பராக்கிரமபாகு இலக்கியவாதியாக காணப்பட்டமையால் அரச அனுசரணை இலக்கியத்துக்குக் கிடைத்தமை. நாட்டின் அரசியல், பொருளாதார வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஏதுவாயமைந்தது.

குருணாகல் காலத்தில் 4ஆம் பராக்கிரமபாகுவின் ஆட்சியின்போது வீதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா அமைக்கப்பட்டு சோழ நாட்டில் இருந்து வந்த பிக்குகளுக்கு வழங்கப்பட்டது. 6ஆம் பராக்கிரமபாகு தனது தாயாரின் நினைவாக பெப்பிலியான சுனேத்ரா தேவி பிரிவெனாவை அமைத்தான். பிரிவெனாவாகவும் வெதாகம ஸ்ரீ கணானந்த பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா, தெவிநுவர இருகல் குலதிலக பிரிவெனா ஆகிய கல்வி மத்திய நிலையங்களின் வளர்ச்சிக்கு அரசஅனுசரணை கிடைத்தமையால் பிரிவேனாக்கல்வி வளர்ச்சியடைந்தது.

கட்டடக்கலையை எடுத்துநோக்கும்போது யாப்பகூவ இராச்சியக் காலத்தில் தென்னிந்தியக் கட்டடக் கலை அமைப்பின் தாக்கத்தை அவதானிக்கலாம். யாப்பகூவ குன்றின் அடிவாரத்தில் அரச மாளிகை எனக் கருதப்படும் அமைப்பின் சிதைவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றின் படிவரிசைகள் கருங்கல்லால் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் காணப்படும் சிங்கவடிவங்கள் சிறந்த கலைப்படைப்பாகக் கருதப்படுகின்றன. யாப்பகூவ தலதா மாளிகை அருகில் தியானநிலையில் உள்ள புத்தர் சிலை காணப்படுகிறது.

கம்பளை இராச்சிய காலத்தில் கட்டடக் கலையின் விசேட பண்பாக காணப்படுவது, பௌத்த, இந்து கட்டடக்கலை அம்சங்கள் இணைந்த கட்டடங்கள் காணப்படுகின்றமையாகும். கடலாதெனிய விகாரை, அம்பக்கே தேவாலயம், லங்காதிலக்க விகாரை என்பன இதற்கு உதாரணங்கள் ஆகும். விகாரைக்கருகில் கோவில்கள் அமைத்தல், இங்கு காணப்படும் விசேட இலட்சணமாகும். கட்டடக் கலையுடன் இணைந்து செதுக்கற் கலையும் நன்கு வளர்ச்சியடைந்ததற்கு அம்பக்கே மரச்செதுக்கல் சிறந்த உதாரணமாகும்.

பௌத்த விழாக்களுள் தலதா பெரகர நடாத்துதல், இந்து சமய உற்சவங்களை நடாத்துதல் தொடர்பாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. ஒவ்வொரு அரசனும், தலாதா பெரகரா நடாத்தி பௌத்த சமயத்திற்கு சேவையாற்றினர். இந்துக்களின் தீபாவளி, தைப்பொங்கல் ஆகிய விழாக்களை நடாத்தினர். சிற்பக்கலையின் கீழ் உலோகங்களினால் சிலைகள் அமைத்தமையைக் காண முடிந்தது.

## சாராம்சம்

- ★ கலிங்க மாகன் இராசரட்டையை ஆட்சிசெய்யும் காலத்தில் பிரதேச இராச்சியங்கள் உருவாகின.
- ★ 3ஆம் விஜயபாகு தம்பதெனியாவைத் தனது தலைநகராகத் தேர்ந்தெடுத்து ஆட்சி செய்தான்.
- ★ 2 ஆம் பராக்கிரமபாகு கலிங்க மாகனிடம் இருந்து நாட்டை மீட்டு சிறந்த ஆட்சியாளனாக விளங்கினான்.
- ★ 1ஆம் புவனேகபாகுவின் கீழ் யாப்பகூவ இராச்சியம் ஆரம்பமானது.
- ★ 4ஆம் பராக்கிரமபாகு குருணாகல் இராசதானியின் மிகச்சிறந்த அரசனாவான்.
- ★ யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆரம்ப கர்த்தா விஜயகூழங்கை மன்னன் ஆவான்.
- ★ ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையில் 12 அரசர்கள் ஆட்சி செய்தனர்.
- ★ கம்பளை இராசதானியின் முதலாவது ஆட்சியாளன் 4 ஆம் புவனேகபாகு ஆவான்.
- ★ இக்காலத்தில் சேனாதிலங்கார, அழகக்கோனார் என்ற இரு பிரதானிகளின் குடும்பங்கள் அரசருடன் நெருங்கிய தொடர்பும் கொண்டிருந்தனர்.
- ★ கோட்டை இராச்சியத்தின் சிறந்தஆட்சியாளனாக விளங்கியவன் இறுதியாக இலங்கையை ஐக்கியப்படுத்தியவனான 6ஆம் பராக்கிரமபாகு ஆவான்.
- ★ இக்காலத்தில் விவசாயமும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகமும் நிலவியது.
- ★ பௌத்த சமயமும் இந்துசமயமும் பரவிக்காணப்பட்டன.
- ★ கட்டடக்கலை, சிற்பக்கலை என்பவற்றில் பௌத்த, இந்து சமயச் செல்வாக்கும் காணப்பட்டது.
- ★ பௌத்த சமயம் இந்து சமயம் சார்ந்த பூஜைகளும், விழாக்களும் இடம் பெற்றன.

## செயற்பாடு :

- ★ 13ஆம் நூற்றாண்டு முதல் 15ஆம் நூற்றாண்டு வரையில் இலங்கை வரலாற்றுடன் தொடர்புடைய கட்டடக் கலை செதுக்கல், சிற்பம் ஆகியவற்றின் படங்களைச் சேகரித்து புத்தகம் ஒன்றைத் தயாரிக்குக. உரிய விளக்கத்தை அதன் கீழ் குறிப்பிடுக.
- ★ தம்பதெனியா காலம் தொடக்கம் கம்பளைக் காலம் வரையான காலத்தில் எழுந்த இலக்கியங்களை வகைப்படுத்தி அட்டவணைப்படுத்துக.

**பயிற்சி :**

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசர்களினால் ஆற்றப்பட்ட 5 பணிகளைத் தருக.
   i) 3ஆம் விஜயபாகு அரசன்
   ii) 2ஆம் பராக்கிரமபாகு அரசன்
   iii) 4ஆம் பராக்கிரமபாகு அரசன்

2. கம்பளை இராசதானியை ஆட்சி செய்த அரசர்களின் பெயர்களைப் பட்டியற் படுத்துக.

3. யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய மூலாதாரங்கள் 4 இனை எழுதுக.

4. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை இந்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட சிறப்பியல்புகள் 5 எழுதுக.

5. ஒவ்வொரு இராச்சிய காலத்திலும் எழுதப்பட்ட இலக்கியங்களையும் அவற்றை எழுதிய ஆசிரியர்களையும் குறிப்பிட்டு கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| இராச்சிய காலம் | நூல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| | | |